2012 ஏப்ரல் 25]

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையானது, அந்தத் தொகுதி சட்டமன்றத் தேர்தலின்போதே சொல்லப்பட்டது. ஆகவே, இது பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

167—

மேல்நிலைப் பள்ளி

***4241—திரு. பி.வி. கதிரவன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்தில் கள்ளர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு பல சிறந்த கல்வித் திட்டங்களையும் ஊக்கத் தொகைகளையும் வழங்கி, அனைவரும் கல்வி கற்க வேண்டும், அவர்களுக்கு எந்தவிதத் தடையும் இருக்கக்கூடாது, குறிப்பாக, பெண்கள் கல்விக்காகப் பெரிதும் ஊக்கத்தை அளித்து, பல நலத் திட்டங்களைத் தீட்டி உதவி புரிந்து வருகிறார்கள். அந்த வகையில் உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்தில், அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி ஒன்று தற்போது செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை 1,867 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். அதில் 1,072 மாணவர்களும், 795 மாணவியர்களும் அடங்குவர்.

முற்பகல் 11–05

எனவே, விக்கிரமங்கலத்தில் மாணவியர்களுக்கென்று தனியாக கள்ளர் மேல்நிலைப் பள்ளி தொடங்குவதற்கானத் தேவை எழவில்லை. எனினும் தேவை ஏற்படின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அவர்கள் ஆணைப்படி தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரமங்கலத்தில், கள்ளர் சீரமைப்புத் துறையின்கீழ் கள்ளர் மேல்நிலைப் பள்ளி இயங்கி இருக்கிறது. அதிலே, 1,072 மாணவர்களும் 795 மாணவியர்களும் பயின்று வருகிறார்கள். அந்தப் பள்ளியில் அதிக எண்ணிக்கையிலான மாணவியர்கள் படித்து வருகிறார்கள். அந்தப் பள்ளியில் இடப் பற்றாக்குறை இருந்து வருகிறது. அதனால், மாணவியர்களுக்கென்று தனியாக ஒரு பள்ளியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியில் அதிகமான மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதை எடுத்துச்சென்று, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா*

2012 ஏப்ரல் 25]

அவர்களுடைய ஆட்சியில் எல்லாத் தரப்பினரையும் முன்னேற்றுகின்ற வகையில், கள்ளர் சீரமைப்புத் துறையின்மூலம் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. அதிலே எங்களுடைய திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட பூசலபுரம் என்ற கிராமத்தில், கள்ளர் உயர்நிலைப் பள்ளி நடைபெற்று வருகிறது. அந்தப் பள்ளியை இந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு 9 பள்ளிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் தரமுயர்த்திக் கொடுத்தார்கள். இந்த ஆண்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று, வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.

திரு. ஏ.கே.டி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதியில், கள்ளர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியைத் துவங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தை ஆய்வு செய்து, தேவையிருப்பின் உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளர் பள்ளிகள் ஆங்கிலேயர் காலத்திலே உருவாக்கப்பட்ட பள்ளிகள். தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை

ஆகிய 3 மாவட்டங்களில் இந்தப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு முழுவதிலிருந்து அங்கே ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்படுகிறார்கள். அங்கே ஆசிரியர்களாக வந்தவர்கள் ஓராண்டுக்குள்ளாகப் பணி மாறுதல் வாங்கிக் கொள்கிறார்கள். அந்தப் பள்ளிகளில் நிறைய ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதைத் தவிர்க்கின்ற வகையில், தேனி, திண்டுக்கல், மதுரை ஆகிய 3 மாவட்டங்களில் இருக்கின்ற ஆசிரியர்களை, அந்தப் பள்ளிகளிலேயே நிரந்தரமாகப் பணி நியமனம் செய்து இந்தக் குறையைப்போக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டு காலமாக இது தொடர்ந்து நடந்து வருகிற பிரச்சினை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக இந்தக் குறையைத் தீர்த்து வைக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவின்படி, அந்த இடத்தை ஆய்வு செய்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் கோட்டாறு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில், 1965 ஆம் ஆண்டு இந்திய வைத்திய முறைகளில் முன்னோடியாக விளங்குகின்ற சித்த வைத்தியத்தைப் பிரபலப்படுத்த*